325

Regd. No. M. 2797. (விலை அணு ஒன்று.)

# வர்த்தக ஊழியன்.

# VARTHAGA OOLIAN.

Trichinopoly. | Monthly Journal of Commerce, Trade and Industry. | November 1934.

மலர் 3.] திருச்சிருப்பள்ளி நவம்பர் மீ -1934 [இதழ் 29

"வர்த்தக ஊழியன்" வருட சந்தா.
உள்நாட்டிற்கு ரூ. 1. வெளி நாட்டிற்கு ரூ. 1—8—0
மாதம் ஒன்றுக்கு விளம்பர விகிதம்.
அங்குலம் ஒன்றுக்கு ரூ. 1—0—0.
பக்கம் ஒன்றுக்கு ரூ. 15—0—0.
அரை பக்கத்திற்கு ரூ. 10. ராப்பர் பக்கத்திற்கு ரூ. 25.
முன்பணமில்லாத விளம்பரங்கள்
பிரசுரிக்க முடியாது. தீர்க்ககால விளம்பரங்களுக்கு
மானேஜருக்கு எழுதவும்.

ஆசிரியர்—திரு. டி. வி. கே. நாயுடு.

அட்டவணை.


| | |
|---|---|
| தொழிற்கல்வி ... | 115 |
| சிறுமணித்திரள் ... | 116 |
| தொழில் அபிவிருத்தி ... | 117 |
| தான்ய நிலைமை ... | 118 |
| ராஜம் (கதை) ... | 119 |
| சாமான்களுக்கு ரயில்வே சார்ஜ்கள் ... | 122 |
| மதிப்புரைகள் ... | 123 |
| மார்க்கட் நிலவரம் ... | 126 |
| இந்திய வர்த்தகம் ... | 127 |
| Trade Secrets ... | 128 |
| Mysore State News ... | 129 |
| Technical Training ... | 129 |
| Travancore State News ... | 130 |
| Industrial Fair ... | 131 |
| Exhibition Train ... | 131 |
| International Radio Trade ... | 132 |


9-JAN 1935 MADRAS

"VARTHAGA OOLIAN"
Annual Subscription.
Inland Rs. 1—0—0. Foreign Rs. 1—8—0.
Advertisement Tariff Per Insertion.
One inch Rs. 1—0—0. One Page Rs. 15—0—0
Half Page Rs. 10—0—0. Wrapper Page Rs. 25
Advertisement without prepayment will not be considered. For further particulars write to the Manager.

இந்திய சட்டசபை தேர்தல்.

திருச்சி—தஞ்சை தொகுதி

டி. ஆர். வேணுகோபால் செட்டியார் அவர்களுக்கே ஓட் கொடுங்கள்.

எலக்ஷன் 10—11—1934

# N. M. ALLYMARICAN & CO.,

**Sanjeevi Sultania Medical Hall,**

## :: Porto-Novo S. A. Dist. India. ::



கனவான்களே! முக்கியம்!! கவனியுங்கள்!!!

ஒரே வேளையில் குணந்தெரியும்.

மன்மத சிங்கம்போல் செய்திடும் மெடல்பெற்ற

## சுல்தானியா

## சிட்டுக்குருவி சத்தின் லேகியம்.



**இந்த சுல்த்தானியா சிட்டுக்குருவிசத்தின் லேகியத்தைப்போல்**

மற்ற வைத்தியர்கள் செய்துகொடுத்தால் ரு. **2000** இனும்.

நண்பிற்குகந்த அன்பர்காள்! அருமையும், பெருமையும், கீர்த்தியும் பெற்ற இந்த அற்புத குணந்தங்கிய லேகியத்தை உபயோகித்த உத்தமர்கள் மணவாழ்க்கையில் சுகானந்த இன்பத்தை அடைவார்கள். ஆஹா! குணத்தால் சிறந்ததுதான் என்று இதனைப் பன்முறையும் புகழ்வார்கள்.

இந்த லேகியம் அசல் பாகத்திற்கோர் விகற்பமின்றி தங்கம், வெள்ளி, செம்பு, பவழம் ஆகிய பஸ்பம் செந்தூரங்களும் அம்பர், கஸ்தூரி, குங்குமப்பூ, எட்டுவித மிஸ்ரிகள், பத்துவகை விதைகள், எழுவகை மூலிகை சூரணங்கள் ஐந்து வேர் வகைகள் மற்ற அருமையான சரக்குகள் (192-ம்) நிறையளவு குறையாதபடி பாகஞ்செய்து வாலையந்திரத்திலிறக்கிய சிட்டுக்குருவி சத்தும் சேர்த்து பாகமாய்ச் செய்யப்பெற்றது.

**லேகியத்தின் குணமாவன:**—வாத பித்த சிலேத்ம மிகுதிக்குறைவால் ஏற்படும் ரத்தக்குறைவு, பலஹீனம் அஸ்தி வெட்டைச்சூடு, இந்திரியம் ஜலம்போல் நீற்று சிற்றின்பத்திலும், தூக்கத்திலும் அதிகமாய் வெளிப்படல் மணவாழ்க்கையில் சீக்கிரம் வெளியாகிவிடுதல், தாது நஷ்டம், நரம்புத்தளர்ச்சி, சதா இடுப்புவலி, மலச்சிக்கல், பசிமந்தம் பித்தாதிக்க உஷ்ணவாய்வு, கிருமி ரோகம், துர்நீர் வியாதிகள், தேகத்தில் ஓடித்திரியும் பலவித வாய்வு ரோகம், பார்சவாய்வு, நெஞ்சுவலி, விரைவாதம், கைகாலசதி மயக்கம், மறதி, ஆண்தன்மை நாளுக்குநாள் குறைதல் முதலியன நிவர்த்தியாகிவிடும். தேக உஷ்ணத்தை சமனப்படுத்தி இரத்தத்தை விருத்திசெய்து நரம்புகளில் ஓடச்செய்து சப்ததாதுக்களையும் வலுப்படுத்தி நீற்றுப்போன தாதுவைக் கெட்டிப்படுத்தி ஆண்தத்துவத்தை விர்த்திசெய்து புத்தி சாதுர்யத்தை கொடுத்து சிற்றின்பம் நுகர சத்துவரீ சமிழ்ந்த கிழவர்களையும் பால்ய பருவ ஆண்சிங்கமாக்கிவைக்கும். ஸ்திரீ சம்மன்னராய் வாழும் புருஷர்களுக்குப் பால்ய பருவ துர்செய்கையால் ஏற்பட்ட நடுப்பிராயத்தில் ஏற்படும் தாதுநஷ்டத்தை மறுபடியும் உண்டாக்குவதற்கு இதைவிட மருந்து வேறில்லை. கிழவர்களையும் இந்த லேகியம் இல்லற இன்பத்தை அனுபவிக்கும்படி செய்கிறது. ஒருதடவை பரீக்ஷை செய்துபாருங்கள்.

40நாள் 80வேளை 15பலம் டப்பி விலை ரு 12. 20நாள் 40வேளை 8பலம் டப்பி விலை ரு. 6-8-0

12நாள் 24வேளை 5பலம் டப்பி விலை ரு. 3-8-0. 8நாள் 16வேளை 2½பலம் டப்பி விலை ரு. 2.

வி. பி. செலவு வேறு.



மெடல்பெற்ற

## நல்லமுத்து பஸ்பம்.

**இந்த பஸ்பத்தைப்போல செய்துகொடுத்தால் ரூ 3000 இனும்.**

இந்த அருமையான பஸ்பத்தை காலை மாலை உபயோகிக்க விபரப்படி சாப்பிட்டு வந்தால் வெட்டை உஷ்ணத்தில் சுக்கிலம் உடைந்து தானே வெளிப்படுதலுமாகிய சுக்கில பலமிழந்தவர்களுக்கும், இரத்தக்கொதிப்பு காங்கை உள்வேகாளம், அழலை, புண், வாய்வேக்காடு, மேகச்சூடு உள்ளவர்களுக்கு பூரண சுகத்தைக் கொடுப்பதுடன் நாடி நரம்புகளுக்கு வலுவைக்கொடுத்து சுக்கிலத்தை கெட்டிப்படுத்தி தேகத்திற்கு நல்ல பலத்தையும், இரத்த விர்த்தியும் தாதுபுஷ்டியும் உண்டாக்கும். ஒரு மனிதன் வயது 20-க்குள் நாதத்தை பலவிதத்திலும் செலவிட்டு 40-வயதுக்குள் கிழவனைப்போல் நின்று தயங்குகிறார்கள். நம் தேகத்தை வலுப்படுத்தி காப்பாற்ற வேண்டுமென்றால் அகஸ்தியர் தயார்செய்த நல்லமுத்து பஸ்பத்தை 40-நாள் ஒருமண்டலம் சாப்பிட்டால் நம் திரேகம் உடையாமல் கடவுள் கிருபையால் வாழ்ந்திருக்கலாம்.

**40 நாள் 80வேளை பஸ்பம் ரு. 50. 14நாள் 28வேளை பஸ்பம் ரு. 20.** வி. பி. செலவு வேறு.

எமது விலாசம்:—

N. M. அல்லிமரைக்காயன் & கம்பெனி,
சஞ்சீவி சுல்தானியா வைத்தியசாலை,
பரங்கிப்பேட்டை P. O.
தென்னாற்காடு ஜில்லா, (இந்தியா.)

பினாங்கு சோல் ஏஜண்டு:—

ஹாஜி A. S. காதர்ராவுத்தர் & கம்பெனி,
நெ. 80, சோலியா ஸ்டிரீட்,
பினாங்கு, S. S.

## அறிவிப்பு.

'வர்த்தக ஊழியன்' வாசகர்களுக்கு தெரிவிப்பது யாதெனில்:— அநேகர் பத்திரிகையை வி. பி. யில் அனுப்பும்படி கேட்டுக்கொள்ளுகின்றனர். தபால் செலவு ஜாஸ்தியாகிறபடியாலும், நமது பத்திரிகை வி. பி. யில் அனுப்பும் வழக்கத்தை கையாடுவதில்லையென்று முடிவு செய்திருப்பதாலும், பத்திரிகை வி. பி, யில் அனுப்பமுடியாததற்கு வருந்துகின்றோம். நேயர்கள் தங்கள் சந்தா பணத்தைமணியார்டர் செய்து சந்தாதாராக சேர்ந்துக்கொள்ளவேண்டியது. இனி மாதிரிபத்திரிகை வேண்டுவோர் 0-1-3 ஸ்டாம்பு அனுப்பினால்தான் வர்த்தக ஊழியன் அனுப்பப்படும். மானேஜர்.

“நாணயம் நனி பேண்”

“வர்த்தக ஊழியன்”

திருச்சினாப்பள்ளி

1934-ஹு நவம்பர்-மீ

# தொழிற் கல்வி

(Technological Education.)

இந்தியா விவசாயநாடாகயிருந்தாலும் தொழில் அபிவிர்த்திக்கு ஏற்ற சாதனங்கள் அபரிமிதமாகயிருக்கின்றனவென்று நிபுணர்களால் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. இந்தியாவில் பல பாகங்களில் தொழிற்சாலைகள் நிறுவப்பட்டுவருகின்றன. இந்தியர்களுக்கு தொழிற்கல்வியில்லாமல் தொழிற்சாலைகள்நிறுவப்படுவதினால் வேலை அனுபவம் வாய்ந்த பிற நாட்டினர்களின் தயவை எதிர்பார்க்கவேண்டியிருக்கிறது. கவர்ன்மெண்டாரும் இந்தியர்கள் அன்னிய நாடுகளுக்குச்சென்று தொழிற்கல்வியை கற்றுக்கொண்டுவர போதிய பொருளுதவியை செய்துவருகின்றார்கள். ஆனால் இந்திய வரி செலுத்துவோர்களின் பணத்தினால் கற்றுவந்த அவர்களுடைய அறிவை கவர்ன்மெண்டார் உபயோகித்துக்கொள்ளாமல் புறக்கணித்து விடுவதால் அவர்கள் அன்னியர்களால்நடத்தப்படும் தொழிற்சாலைகளிலும் மற்ற இடங்களிலும் வேலைக்கு அமர்த்தப்படுகின்றார்கள். இந்தியாவுக்கு இதனால் நன்மைஏற்படுவதில்லை. மேலும் இந்தியாவில் சிற்சில இடங்களில் கலாசாலைகள் நிறுவப்பட்டிருக்கின்றன. கவர்ன்மெண்டு உபகார சம்பளங்களினால் வாசித்து தேர்ச்சியடைந்திருக்கும் மாணவர்களை கவர்ன்மெண்டார் வேலையில் அமர்த்திக்கொள்ள பிரயத்தனங்கள் செய்வதில்லை. இவர்களும் மற்றவர்களும் பி. எ. பட்டம்பெற்றவர்களைப்போல்வேலையில்லாமல் அலைந்துகொண்டிருக்கின்றார்கள். வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க மேல் நாடுகளில் புதிய புதிய நிவர்த்தி மாகாகங்களை செய்துகொண்டிருக்கையில் இந்தியாவில்அதிலும் சென்னை மாகாணத்தில் 6 மாதத்திற்கோருமுறைஏராளமான இளைஞர்களை பட்டம் சூட்டி வேலையில்லாமல் திண்டாடும் கூட்டத்தாருடன்சேர்த்துக்கொண்டே போகின்றார்கள். ஆனால் இந்த பட்டதாரிகளுக்கும் தொழிற்கல்வி கற்றுவந்த பட்டதாரிகளுக்கும் வித்யாசம் உண்டு. ஆகையினால் தொழில் கல்வி பட்டம் பெற்றவர்களையே சிறப்பாக கவனிக்க கவர்ன்மெண்டார் கடமைப்பட்டிருக்கின்றார்கள். நம்முடைய அபிப்பிராயத்தை தழுவியே அண்ணாமலை சர்வகலாசாலை ஸ்தாபகர் தினக் கொண்டாட்டத்தில் சென்னை சர்வகலாசாலையின் உபஅத்யக்ஷகரான மிஸ்டர் லிட்டில் ஹெயில்ஸ் தொழிற்கல்வியைப் பற்றி வெகு விரிவாகப் பேசியிருப்பதை தொழிற்கல்வியின் அபிவிருத்தியில் சிரத்தையுள்ள எல்லோரும் கவனிக்கத்தக்கவையாகயிருக்கின்றன. அவர் மூன்று முக்கிய விஷயங்களை குறிப்பிடுகிறார். முதலாவதாக பயிற்சி பெற்றவர்களுக்குவேலைகொடுக்ககூடியதொழில் ஸ்தாபனங்களிருக்கவேண்டும். இரண்டாவதாக ஒரு தொழிலில் பயிற்சி பெற்று வெற்றியும் பெறுகிறவர்களை கட்டாயம் வேலைக்கு எடுத்துக்கொள்வதென்ற உறுதி சம்பந்தப்பட்ட கைத்தொழில் ஸ்தாபனங்களுக்கிருக்கவேண்டும் மூன்றாவதாக கைத்தொழில் பயிற்சி பெற்று வெளிவரும் மாணவர்களுடைய தகுதிக்கும் அந்தஸ்த்திற்கும் தகுந்த சம்பளத்தை கைத்தொழில் ஸ்தாபனங்கள் கொடுக்க முன் வரவேண்டும். கவர்ன்மெண்டார் மிஸ்டர் ஹெயில்ஸ் சொல்லியிருப்பதை நன்கு பரிசீலனை செய்து வேண்டுவனவற்றை செய்வார்களென்று நம்புகிறோம்.

தொழிற்கல்வியின் அவசியத்தைப்பற்றி சிம்லாவில் சமீபத்தில் நடைபெற்ற ரயில்வே மகாநாட்டில் தலைமை வகித்த மிஸ்டர் வில்லியம்சன் அவர்களும் ரயில்வே உத்தியோகஸ்தர்கள் தங்களுடைய குழந்தைகளுக்குதொழிற்கல்வியைபோதிக்கும்படியாக சொல்லியிருப்பதையும் இங்கு குறிப்பிடவேண்டியதாகயிருக்கிறது. மிஸ்டர் லிட்டில்ஹெயில், ஸ்தாபகர் தினக்கொண்டாட்டத்தில் தம்முடைய பிரசங்கத்தில் தொழிற்கல்வியைப்பற்றி பேசியிருக்கின்றார். இவைகளிலிருந்து இந்தியாவுக்கு தற்சமயம் தொழிற்கல்வி மிகமிக அவசியமென்று கவர்ன்மெண்டார் எண்ணி அபிவிருத்திக்கு வேண்டிய வழிகளைச்செய்வார்களென்று எதிர்பார்க்கிறோம்.

## விளம்பரம்.

தங்கபதக்கங்கள் பெற்ற சித்தூர் ஒட்டுமாஞ் செடிகளும், இதர கனி வர்க்க செடிகளும், இங்கிலீஷ் வெளிநாட்டு-உள்நாட்டு காய்கறிகள் பூ வகைகளின் விதைகளும் சரசமான விலைக்கு கிடைக்கும். விலைஜாப்தா இனாமாக அனுப்பப்படும்.

THE RURAL FARM,
Samuelpuram, Pakala P. O.,
Chittoor District.

# சிறுமணித்திரள்.

## Editorial Notes.

### சாமான்களுக்கு சார்ஜ்.

சமீபத்தில் சிம்லாவில் நடைபெற்ற ரயில்வே மகாநாட்டில் சாமான்களை பாகுபாடு செய்து சார்ஜ்களை விதிக்க ஏற்பாடு செய்திருப்பதால் வர்த்தகர்கள் இப்பொழுதுமுதலே உஷாராகயிருந்து வேண்டுவன செய்துகொள்ள முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டுமென்று தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

### உஷார்.

காசியில் பிரசுரமாகும் செலஸ்டியல் மெஸ்ஸஞ்ஜர் என்ற ஜோஷ்ய பத்திரிகையின் அக்டோபர் மாத இதழில் நவம்பர் மாதம் 7௳ 5-கிரகங்கள் ஒன்று சேரப்போவதால் பூகம்பம் ஏற்படலாமென்றும் அன்றிரவு தூங்காமல் விழித்திருக்கும்படியாகவும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆகையினுல் பொதுஜனங்கள் உஷாராக இருக்கும்படியாக கேட்டுக்கொள்ளப்படுகிறது.

### சிறு வர்த்தகர்களுக்கு ஆபத்து.

பொருள்காட்சியென்று சொல்லிக்கொண்டு அதை நடத்துபவர்கள் பணத்தை ஏராளமாக சம்பாதிக்கின்றூர்களென்று சிம்லா வர்த்தக சங்கத்தின் வருடாந்திர கூட்டத்தில் அதன் தலைவர் திரு. ஷாதி ராம் மோஹீந்திரா சொல்லியிருக்கின்றூர். இந்த பொருள்காட்சிகளினுல் காட்சிகள் நடைபெறுமிடங்களிலுள்ள வர்த்தகர்களுக்கு வர்த்தகம் குறைந்துபோய் நஷ்டப்பட நேரிடுகின்றதை விபரமாக எடுத்துக் காட்டியிருப்பதையும், கவர்ன்மெண்டு மெம்பர்களும், மந்திரிகளும் இக்காட்சிகளை திறந்து வைக்கின்றபடியினுல் திரு.மொஹீந்திரா சொல்வதைப்பற்றி பரிசீலனை செய்வார்களென்றும் எதிர்பார்ப்பதுடன் ஆங்காங்குள்ள வர்த்தகர்களும் ஆக்ஷேபித்து அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தும்படியாக கேட்டுக்கொள்ளுகிறோம்.

### அலுமினியம் விளைவு.

குவாலியர் சமஸ்தானத்தில் ஜியோலாஜிகல் சர்வே டைரக்டராகயிருந்த டாக்டர் டேபி என்பவர் 70-லட்சம் டன் அலுமினியம் செய்ய 3 கோடி டன் புக்சைட் என்ற உலோகம் இந்தியாவில்கிடைக்குமென்றும், இதனுல் 3000 வருடங்களுக்கு பிற நாடுகளிலிருந்து அலுமினியம் வரவழைக்கவேண்டியதில்லையென்றும் சொல்லியிருப்பதை இந்திய நாட்டின் தொழில் அபிவிருத்தியில் அபிலாஷையுள்ளவர்கள் கவனிக்கும்படியாக கேட்டுக்கொள்ளுகிறோம். தற்காலத்தில் ஆகாசக்கப்பல்களுக்கெல்லாம் அலுமினியம் உபயோகப்படுகிறபடியினுல் இந்தியாவிலிருந்து ஏராளமாக ஏற்றுமதிசெய்ய சாதகமாகயிருக்கும்.

### தீப்பெட்டி வரி.

சமீபத்தில் கவர்ன்மெண்டாரால் தீப்பெட்டிகளுக்கு ஏற்படுத்தப்பட்டிருக்கும் நிபந்தனைகள் மேற்படி தொழில் செய்கிறவர்களுக்கு மிகுந்த பாதகத்தை விளைவிக்குமென்றும் கீழ்கண்ட விதமான சௌகரியங்கள் செய்துகொடுக்க வேண்டுமென்றும் இந்தியா கவர்ன்மெண்டாருக்கு கல்கத்தா நெருப்புப்பெட்டி உற்பத்தி சங்கத்தாரால் கேட்டுக்கொண்டிருப்பதை நாமும் ஆதரிக்கிறோம். (1) லைசென்ஸ் வைத்திருப்பவர்கள் நெருப்புப்பெட்டிகளில் ஒட்டும் முத்திரை கடிதங்களை இனுமாக வழங்கவேண்டும். (2) லைசென்சின் 5, 6-வது விதிப்படி வரிகளை வசூல் செய்யவேண்டும். (3) இந்தியர்களல்லாத மற்றவர்களால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் தொழிற்சாலைகளில் அதிகமான நெருப்புப்பெட்டிகளை உற்பத்தி செய்யக்கூடாதென்று தடைசெய்யவேண்டும். (4) அந்த தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யும் நெருப்புப்பெட்டிகளுக்கு சர்சார்ஜ்விதிக்கவேண்டும்.

### எலக்ட்ரிக் அபிவிருத்தி.

நீலகிரி மலையிலிருக்கும் நீர்வீழ்ச்சியிலிருந்து உற்பத்தி செய்யும் பைக்காரா எலெக்டிரிக் தொழிற்சாலையிலிருந்து 1933-34ம் வருடத்தில் எதிர்பார்த்த வருமானத்தைவிட அதிகம் கிடைத்திருக்கிறது. 6,534,000 யூனிட் எதிர்பார்த்தார்கள். 9,669,203 யூனிட் செலவாகியிருக்கிறது. 76,000 ரூபாய் வருமானத்திற்கு 1,35,000 ரூபாய் வருமானம் கிடைத்திருக்கிறது. இன்னும் அதிகம் எதிர்பார்க்கிறூர்கள். தென்னிந்தியா கூடியசீக்கிரத்தில் எலக்ட்ரிக் மயமாகிவிடும்போலிருக்கிறது.

### இந்தியன் கம்பெனி ஆக்ட்.

இந்தியன் கம்பெனி ஆக்ட்டை தற்காலத்திற் கேற்பவும் மேல்நாடுகளின் அமுலி லிருக்கும் சட்டங்களை அனுசரித்தும் திருத்தி புதிய மசோதாவைக் கொண்டு வருவதற்கு இந்திய கவர்ன்மெண்டார் ஏற்பாடு செய்து கொண்டிருப்பதாயும் இதற்காக திரு. ஷூசில் சென் என்பவரை ஸ்பெஷல் ஆபீசராகவும் நியமித்திருப்பதாயும் அறிகிறோம். இந்தியன் கம்பெனி ஆக்ட்டை திருத்த வேண்டியது அவசியமென்பதை நாம் ஒப்புக்கொள்ளுகிறோம் ஸ்பெஷல் ஆபீசர் அவர்களுடைய சிபார்சை சமீபத்தில் தெரிவிக்க முடியாதென்றும் காலம் செல்லுமென்றும் ஆனுல் கவர்ன்மெண்டார் இது சம்மந்தமாகயோசனை சொல்ல கமிட்டி நியமிப்பதில் இன்னும் யாதொரு முடிவுக்கு வரவில்லையென்றும் தெரிகிறது. மசோதாவை சட்டசபைக்கு ஆஜர்செய்யுமுன் பொதுஜனங்களின் அபிப்பிராயத்தை தெரிந்துகொள்வதுடன் நியமிக்கப்போகும் கமிட்டியில் கம்பெனியார்களில் சிலரும் வர்த்தக சங்க பிரதிநிதிகளும் கலந்திருக்கும்படி கவர்ன்மெண்டார் ஏற்பாடு செய்வார்களென்று நம்புகிறோம்.

# தொழில் அபிவிருத்தி.

## INDUSTRIAL ADVANCEMENT.

### நீருக்கடியில் புகைப்படம் பிடித்தல்.

ஐக்கிய அமெரிக்காவின் புகைப்பட நிபுணர் திரு. ஜெ. ஈ. வில்லியம்ஸன் என்பவர் சமுத்திரத்தின் அடிப்பகுதியிலிருந்துகொண்டு நீர் வாழ்வனவற்றை படம் பிடிக்கும் வேலையில் ஈடுபட்டிருப்பவர். அவர் அங்ஙனம் நீருக்கடியில் இருந்துகொண்டு படம் பிடிப்பதில் தனக்கு எவ்விதமான அபாயமும் இல்லையென்று விளக்குகிறார்.

### சிகரெட் டப்பா அளவில் எக்ஸரே குழாய்.

ஒரு சிகரெட் டப்பா அளவில் எக்ஸ்ரே குழாய் ஒன்று நூதனமாய்க்கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. அது செல்ட்டன்ஹாமில் பிரிட்டிஷ் பல் வைத்திய காட்சிசாலையில் வைக்கப்பட்டிருந்தது. அச்சிறிய கருவி சிக்கலான பல அமைப்புகளையுடைய பழைய கருவியைவிட பல மடங்கு அதிக விளக்கமான படங்களை உற்பத்தி செய்கிறது.

### புகை பாய்ச்சும் துப்பாக்கி.

பிரிட்டிஷ் ஈஸ்ட் ஆபிரிக்காவிலுள்ள காடுகளில் வேட்டைக்காரர்கள் புகை பாய்ச்சும் துப்பாக்கிகளை உபயோகிக்கிறார்கள். 60 அடி விஸ்தீரணத்திற்குட்பட்டவிடங்களிலுள்ள மிருகங்களின்மேல் புகைத்துப்பாக்கிக் குண்டுகளைப் பிரயோகஞ்செய்து அப்பிராணிகளை உயிருடன் பிடித்துவிடுகிறார்கள். அந்த துப்பாக்கி பிரயோகத்தால் பிராணிகள் இறந்து விடாமல் உயிருடன் பிடிக்கப்படுகின்றன. சிங்கங்களை பிடிப்பதில் அந்த நூதன துப்பாக்கி விசேஷமாய் உபயோகிக்கப்படுகிறது.

### படத்தில் பிடிபடா வெளிச்சம்.

நீலநிறக் கதிர்களை வீசும் அன்னா மொனாரோவென்னும் பெண் விஞ்ஞானிகளின் சோதனையில் வைக்கப்பட்டிருக்கிறாள். அவள் க்ஷயரோகத்தால் கஷ்டப்படுகிறாள். அவள் பிரானே ஆஸ்பத்திரியில் இருக்கிறாள். அவளுக்கு வயது 42 ஆகிறது. அப்பெண்ணிடம் தோன்றும் வெளிச்சத்தைப் படம் பிடிக்க சினிமாப்படம் பிடிக்கும் கருவி உபயோகிக்கப்பட்டது. ஆனால் அந்த வெளிச்சம் படத்தில் பிடிபடாமல் இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

### ஒரு விநாடியில் 20 படங்கள்.

அமெரிக்கா சிக்காகோ நகரத்திலிருந்து 1000 மைல்தூரமுள்ள நியூயார்க் நகரத்திற்கு ஒரு விநாடி நேரத்தில் 20 படங்களை ரேடியோ மூலமாய் அனுப்புவதற்கு அமெரிக்கா ரேடியோ கார்பரேஷன் ஒரு நூதன முறையைக்கண்டு பிடித்திருக்கிறது. அது சோதனை செய்யப்பட்டதில் முழு வெற்றிகிடைத்திருக்கிறது. அம்முறையால் டைப் செய்யப்பட்ட எழுத்துகளையும் மகா துரிதமாய் அனுப்பமுடியுமென்று சொல்லப்படுகிறது. லண்டனில் எழுத்துகளும் அங்ஙனமே அனுப்பப்பட்டு பரிட்சை செய்யப்பட்டன.

### விவசாயவேலைக்கு மின்சார சக்தி

இங்கிலாந்தில் விவசாய வேலைக்கு மின்சார சக்தி மிகவும் உபயோகப்பட்டு வருகிறது. அங்கு 5000 பண்ணைகளில் மின்சாரம் உபயோகிக்கப்பட்டு வருகிறது. ஆயிலஸ்பரிக்குச் சமீபத்தில் உள்ள நிலங்களின் பூசாரம் மின்சாரத்தால் பக்குவம் செய்யப்பட்டுவருகிறது. மிட்லோத்தியனில் ஒரு ஸ்காத்லாந்தியர் தன் வயல்களைச் சுற்றிக் கம்பிபிணைத்து அவைகளின் மூலமாய் மின்சாரத்தை இயக்கி அதன் சக்தியால் உழவுவேலை செய்துவருகிறார்கள். வயல்களில் நடக்கும் அநேகமாய் எல்லா காரியங்களுக்கும் மின்சாரம் தாராளமாய் உபயோகிக்கப்பட்டு வருகிறது.

### மலை நகர்கின்றது!

அயர்லாந்து தேசத்தில் மேயோவுக்கும் விலிக்கோவுக்குமிடையிலிருக்கும் ஆக்ஸ் மலை ஒரு இரவில் இரண்டுமைல் தூரம் நகர்ந்து வந்திருப்பதாகத் தெரிகின்றது. இதனால் பாறைகள் மண் திடல்கள் முதலியவை சிதறி நொறுங்குண்ட சத்தம் பல மைல் தூரம் கேட்கப்பட்டிருக்கின்றதாம். அம்மலைச் சாரலையடுத்து வசிக்கும் மக்களெல்லாம் இதனைக்கண்டு நடுக்க முற்றுவிட்டனராம். ஆடுமாடுகளும் விளைநிலங்களும் ஏராளமாக அழிந்துவிட்டனவாம். அதிகாரிகள் இப்பிரதேசத்தைப் பார்வையிட்டு இன்னும் இந்த மலை நகரக்கூடுமென அறிந்து மக்களுக்கு எச்சரிக்கையளித்திருப்பதாகவும்சொல்லப்படுகிறது

### இரவு பகலாகும் விந்தை

சமீபகாலத்தில் "பிரான்ஸ்" டீல் துறைமுகத்திற்கு எதிரில் கடலுக்கு மேல் மேகமண்டலத்தில் கண்களைக் கூசச்செய்யக்கூடிய மகா பிரகாசமுள்ள மின் ஒளிக்கதிர்களை பாய்ச்சி இடைவிடாத மிகப்பெரிய வெளிச்சத்தைஉண்டாக்கினார்கள். அந்த மாபெரும் வெளிச்சம் கடலின் பரப்பில் பலமைல் விஸ்தீரணத்துக்குப் பாய்ந்து ஒளிர்ந்தது. கடலில் மிதந்த கப்பல்களெல்லாம் மிக விளக்கமாய்த்தோன்றின. அம்மேக மண்டல ஒளியால் பிரான்ஸ் தேசத்து சுண்ணாம்பு குன்றுகளெல்லாம் வெள்ளை வெளேரென்று பிரகாசித்தன. ஆகாய மண்டலம் முழுவதும் நீல நிறமாய்த் திகழ்ந்தது. அதனால் கடல் நீரின் நிறம் பளிச்சென்று ஜொலித்தது. சூரியன் பிரகாசிக்கும் ஒரு பகற்பொழுதே போல அவ்விரவு விளங்கிற்று.

இந்தஅற்புதக்காட்சி மாலை 7மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு பாதி இரவுக்குப்பிறகு சிறிதுநேரம் வரையில் காட்டப்பட்டது

### மனிதனுடைய வேகம்.

வீட்டில் நாம் நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு மணிக்கு 115,000 மைல்கள் வீதம் பிரயாணம் செய்துவருகிறோம் என்பது வானசாஸ்திரம்கண்ட உண்மை. பூமி தனது அச்சில் அமர்ந்து மணிக்கு 1000 மைல்கள் வீதம் தன்னையே சுழன்று சுற்றிக்கொள்கிறது என்று வானசாஸ்திரிகள் கணக்கெடுத்திருக்கிறார்கள். பூமி சூரியனைச் சுற்றி தன் மண்டல வெளியின் ஊடே மணிக்கு 70,000 மைல்கள் வீதம் விரைந்து பாய்கிறது. சூரியமண்டலக்கிரகக்கூட்டங்களில் பூமி சூரியனைச்சுற்றி ஆகாய வெளியில் மணிக்கு 44,000 மைல்கள் வீதம் விரைந்து சுழலுகின்றன. பூமிக்குச்சம்பந்தமான அநேக கிரகச்சுழற்சி வேகம் இன்னும் கணிக்கப்படாமலே இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

### கருப்பையைக்காட்டும் சினிமா படம்.

பம்பாய் டாக்டர் யஸ். ஆர். நாயர் என்பவர் வைத்தியத்திற்குரிய சினிமாப் படம் ஒன்று தயாரித்திருக்கிறார். மனிதர் இருதயம் கருப்பையில் அமைக்கப்பட்ட ஆதிகாலமுதல் உருவாகிப் பெரிதாகி வளருகிறது என்பதை அப்படங்

கள் நன்கு காட்டுவதாயிருக்கின்றன ஜெர்மனியிலும் அமெரிக்காவிலுங்கூட. அத்தகைய படம் கிடையாதென்று சொல்லப்படுகிறது. இருதயம் கருக் குழியில் தோன்றி வளருகிறது என்பதை யாரும் இதுவரையில் காட்டியதில்லை. வெறும் கோடுகளை வரைந்தே இதுவரையில் அதை விளக்கிவந்தார்கள். ஆனால் பம்பாய் டாக்டர் திரு. நாயர் அதை வெகு திறமையாய் ஆடும் படங்களால் விளக்கியிருக்கிறார். இருதயப் படம் சுமார் 3000 அடி நீளமுள்ளதாக இருக்கிறது. அதைத் தயாரிக்க ரூ 600 தான் பிடித்ததாகச் சொல்லப்படுகிறது.

## பூமியின் நிறம் நீலம்.

பூலோகத்தைச் சந்திரகிரகத்திலிருந்து பார்த்தால் அது சிறிது மங்கலான நீல நிறத்தில் தோன்றும். பூமிக்கு மேலே ஆகாயவெளியில் சற்று தூரத்தில் இருந்துகொண்டு பூமியைப்பார்த்தாலும் அது நீல நிறமாகவே தோன்றும். இவ்வுண்மை லோவெல் நக்ஷத்திரசாலையில் புரொபசர் வி. யம். ஸ்லிப்பர் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது. பூமியின் பிரகாசம் சந்திரன்மேல் விழும்போது அதைப்புகைப்பட முறையில் பிடித்து அதன் உதவியால் ஆக்கப்பட்ட ஸ்பெக்ட்ரோகிராம் என்னும் கருவியால் பூமியின் நிறம் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. பூமியிலிருந்து வெளியேறும் வெளிச்சம் அந்த விஞ்ஞானியின் நுட்பமான கருவியின்மீது பிரதிபிம்பத்தால் பிடிக்கப்பட்டிருக்கிறது. ப்ளூட்டோ என்னும் கிரகம் சமீபத்தில் புதிதாய்க் கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறது. அதன் நிறம் சிறிது மங்களான சிவப்பும் நீலமும் கலந்ததைப் போல யிருக்கிறது.

## வாயில் மின்சாரம்.

மனிதர்களுடைய வாய் ஒருமின்சாரச் சிற்றறையாகவிருக்கிறது என்று விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். பற்கள்பழுது பார்க்கப்படும்போதும், செயற்கைப் பற்கள் அமைக்கப்படும்போதும் அவைகளுக்கு ஏற்ற உலோக வகைகளைத் தேர்ந்தெடுப்பதில் முக்கிய கவனஞ் செலுத்தப்படல்வேண்டும். மின்சார உற்பத்திச்சிற்றறையில் மின்சாரம்பிறப்பிக்கப்படுவதைபோல மனிதர்களுடைய வாயில் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுவதாக ரசாயன நிபுணர்கள் கண்டறிந்திருக்கிறார்கள். மனிதர்கள் வாயில் ஊறும் உமிழ்நீர் நல்ல எலக்ட்ரோலைட் பொருள் என்று பரிட்சையில் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. ஒரு ரசாயன மின்சார உற்பத்திக்கூட்டில் பற்பலவிதமான உலோகங்களால்தகடுகளும், பாலங்களும் யேடைகளும் அமைக்கப்பட்டிருப்பதுபோல், மனிதர் வாயிலும் மின்சார உற்பத்திக்கு ஆஸ்பதமான பலவித உலோக சத்துக்களடங்கிய பொருள்கள் செறிந்த அமைப்புகள் இருக்கின்றன. மின்சார உற்பத்திக்குச் சாதகமான பொருள்களைக்கொண்டே பற்களைபழுது பார்த்தால் எவ்விதகஷ்டமுமேற்படாது

# தான்ய நிலைமை.

(Crop Reports)

### எள்ளு (Gingelly)

சென்னை மாகாணத்தில் செப்டம்பர்மீ 25 தேதிவரையில் 4,05,000 ஏக்கர் எள் சாகுபடி செய்யப்பட்டிருக்கிறது. சென்ற வருடம் 5,32,200 ஏக்கர் சாகுபடி சமயத்தில் மழையில்லாததினால் குறைவான ஏக்கரில் பயிரிடப்பட்டிருக்கிறது. சென்ற வருடத்தைவிட இவ்வருடம் திருச்சி ஜில்லாவில் 29,000 ஏக்கரும், திருநெல்வேலியில் 12500 கோயம்புத்தூரில் 15500 ஏக்கரும், கோதாவரி ஜில்லாக்களில் 30,000 ஏக்கரும், விசாகப்பட்டணத்தில் 10,000 ஏக்கரும், கஞ்சத்தில் 10,000 ஏக்கரும் குறைவாக சாகுபடி செய்யப்பட்டிருக்கிறது. இதுவரையில் அறுவடையானதில், குறைவாகவே மாசூல் கிடைத்திருக்கிறது. குண்டூரில் மழையில்லாமல் பயிர்கள் காய்கின்றன. சில இடங்களில் மழையை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது.

### நிலக்கடலை (Groundnut)

சென்னை மாகாணத்தில் செப்டம்பர் மாதம் 25வவரையில் 1,937,300 ஏக்கர் நிலக்கடலை சாகுபடி செய்யப்பட்டிருக்கிறது. சென்ற வருடம் 3,211,200 ஏக்கர் மழையில்லாத காரணத்தினாலும், விலை குறைவினாலும் அதிகமான சாகுபடி கிடையாது. பல்லாரி ஜில்லாவில்மட்டும் 369,000 ஏக்கர் நிலங்களிலிருந்து 1,42,000 ஏக்கர் சாகுபடி செய்யப்பட்டிருக்கிறது. கோயம்புத்தூர் சேலம் ஜில்லாக்களில் கோடைப்பயிர் அறுவடையானதில் எதிர்பார்த்த விளைச்சலுக்கு குறைவாக கிடைத்திருக்கிறது. கஞ்சம் ஜில்லாவில் அதிக மழையினாலும் மற்ற ஜில்லாகளில் மழையில்லாததினாலும் பயிர்கள் சேதமடைந்திருக்கிறது. ஜூலைமாதத்தைவிட செப்டம்பர் மாதத்தில் விலை அதிகமாகவே விற்கப்பட்டிருக்கிறது,

### நெல் (Paddy.)

சென்னை மாகாணத்தில் செப்டம்பர் மாதம் 25தேதி வரையில் 7,244,000 ஏக்கர் நிலங்களில் நெல் சாகுபடி செய்யப்பட்டிருக்கிறது. இதே காலத்தில் சென்ற வருடத்தில் 7,479,000 ஏக்கர் சாகுபடி செய்யப்பட்டது. காலத்தில் மழையில்லாததினால் பயிர் செய்யப்படவில்லை. முதல் சாகுபடி மாகாணத்தின் தென்பாகத்திலும், மேற்கு கரையிலும் கோயம்புத்தூரிலும் அறுவடையாகியிருக்கின்றது. திருநெல்வேலியில் வாய்க்கால்களில் போதுமான ஜலமில்லாததால் கார் சாகுபடி குறைவு. மற்ற ஜில்லாக்களில் விளைவுசாதாரணமாகவேயிருக்கிறது. பல்லாரி, நெல்லூர், சேலம் ஜில்லாக்களில் தண்ணீரில்லாமலும் மேல கோதாவரி கீழ கோதாவரி ஜில்லாக்களில் வெள்ளத்தினாலும் சேதமானாலும் மற்ற ஜில்லாக்களில் சுமாராகவேயிருக்கிறது. செப்டம்பர் மாதக் கடைசியில் நெல் மணங்கு விலை:— நெல்லூரில் ரூ. 2-13, மதுரை, நந்தியாலில் ரூ. 2-11, சேலம் திருநெல்வேலியில் ரூ. 2-10, வேலூரில் ரூ. 2-8, கொச்சி, காக்கிநாடாவில் ரூ. 2-6, திருச்சினாப்பள்ளி, விஜயநகரத்தில் ரூ. 2-5, பர்காம்பூரில் ரூ. 1-10, ஜனவரி மாதத்துடன் ஒப்பிட்டுப்பார்த்தால் எல்லாஜில்லாக்களிலும் விலை உயர்ந்திருக்கிறது.

### கரும்பு (Sugar Cane)

இந்தியாவில் கரும்பு சாகுபடி செய்யப்பட்ட நிலங்களின் விஸ்தீரணத்தை சென்னை மாகாணத்துடன் ஒப்பிட்டுப் பார்த்தால் சென்ற 32-33ம் வருஷத்துடன் முடிவான 5-வருடங்களில் 100க்கு 3-7 வீதம் சென்னை மாகாணத்தில் கரும்பு சாகுபடி செய்யப்பட்டிருக்கிறது. 1934ம் வருடம் செப்டம்பர் மாதம் 24 தேதி வரையில் 1,14,710 ஏக்கர் சாகுபடி செய்யப்பட்டிருக்கிறது. சென்ற வருடம் இதே காலத்தில் 1,13,500 ஏக்கர் கிருஷ்ணா, குண்டூர், தென் ஆற்காடு ஜில்லாக்களில் அதிகமாகாக சாகுபடி செய்யப்பட்டிருக்கிறது. கிருஷ்ணா, குண்டூர், ஜில்லாக்களில் சர்க்கரை தொழிற்சாலைகள் நிறுவப்போவதை முன்னிட்டு மேற்கண்ட இரண்டு ஜில்லாக்களிலும் 800 ஏக்கரிலிருந்து 3400 ஏக்கருக்கு உயர்ந்திருக்கிறது. திருச்சினாப்பள்ளி ஜில்லாவில் கரும்பு பயிரில் ஒருவிதமானநோய் பரவியிருக்கிறது. கரும்பு விளைவு சென்னை மகாணத்தில் நல்ல நிலைமையிலிருந்தால் 3,19,280 டன் வெல்லம் எதிர்பார்க்கிறார்கள். செப்டம்பர்மாதக் கடைசியில் வெல்லம் விற்ற விலை:— ஈரோட்டில் ரூ. 10-5, கடப்பையில் ரூ. 7-13, நந்தியாலில் ரூ. 7-11, வேலூரில் ரூ. 7-6, திருச்சினாப்பள்ளியில் ரூ. 7-0 மற்ற இடங்களில் ரூ. 6-6 முதல் ரூ. 6-13 வரையில் விற்றது.

# ராஜம்—சமூகசீர்திருத்தக் கதை.

(Social Reform Novel.)

(திரு. எம் எஸ். ஆர். சந்திரன் எழுதியது.)

அத்தியாயம் 24] [செப்டம்பர் மாதத் தொடர்ச்சி.

**பூர்வ கதை:**—திருச்சியில் மாணவர்களின் பந்தாட்டமும் சீர்திருத்த உணர்ச்சியும் படித்தஸ்திரீகளின் எண்ணங்கள், ராஜத்தின்விவாகத்தில் எதிர்பாராத சம்பவம், ஸ்ரீசிவாசய்யர்குடும்பத்தில் மனைவியாகூலம், ஸிவில் விவாகச்சட்டத்தின்கீழ் விவாகரிஜிஸ்தர், தீட்சதரின் சூழ்ச்சி, சிகந்தராபாத்துக்கு ரயில் பிரயாணமும் காட்டில் நேரிட்ட சம்பவமும், ஸ்வர்ணத்தின் மனோதைரியம் கள்ளர் கூட்டக்கொலை, ஸ்வர்ணபுரி அரசனும் ஸ்வர்ணமும் சந்திப்பு, ஸ்வர்ணம் தன் பெயரை ராஜம் என்று மாற்றிக்கொள்ளுதல், ஸ்வர்ணபுரி அரசன் தர்பார், ஸ்வர்ணம் (ராஜம்) ஜமீன்தாரியானது, சிகந்தராபாத்து ரெஸிடெண்டு தர்பார், ராஜம்-மணி சந்திப்பு, ரெங்கனின் மனோநிலையும் ஜோதிடர் வேடமும், ரங்கனாதபுரத்தில் தர்ம சங்கட நிலைமை, சர்க்கார் உத்திரவும் வரவேற்பு ஏற்பாடும், விட்டுப்பிரிந்தவர்கள் கூடுதல், முத்து கலியாண விஷயம் ராணியும் மணியும் (அண்ணனும் தங்கையும் கூடிப்பேசிய விபரம்.)

**தொடர்ச்சி:—**

சிகந்தராபாத்தில் பீகம்சாஹிபா ரஸ்தாவின் வலது பக்கத்தில் ஒரு சந்துண்டு சந்தின் கோடியில் தெற்கு பார்த்த வீட்டின்முன்புறத்தில் வாயிலண்டை சுமார் 18 வயதுள்ள ஒரு பெண்மணி நின்று கொண்டிருந்தனள். அவளது முகமோ வஸந்த கால சந்திரனையும் பழித்ததெனின் அவளது முகவிலாஸ மேன்மையைப்பற்றி விரித்துரைக்கவொண்ணாது மிகுந்தரூபலாவண்ணியம் பெற்று விளங்கினள். இயற்கை வடிவழகினள். செயற்கையழகுபடுத்த யாதொருவித விலையுயர்ந்த ஆடை ஆபரணங்களையும் அவள் தரித்துக்கொள்ளவில்லை. அவற்றினை வாங்கவும் அவளிடமும் அவள் குடும்பத்தாரிடமும் பணமும் கிடையாது. அவளைப்பார்த்த மாத்திரத்தில் ஒரு ஏழைப்பெண் என்று தீர்மானித்து விடலாம். அவளது அழகு பொருந்திய சரீர அமைப்புக்கும், சாந்தகுண சீலத்துக்கும் மிகப்பொருத்தமாகவே அவளது குணங்களும் காணப்பட்டன. பொதுவாகக் காணுமிடத்து.

"நாற்குணமும் நாற்படையா ஐம்புலனும் நல்லமைச்சா
ஆற்குஞ்சிலம்பே அணிமுரசா-வேற்கும்
வாளுமே கண்ணா மதிகுடைக்கீழ்
ஆளுமே பெண்ணே யரசு."

மிருந்த உயரிய குணங்களுக்கு ஏற்றவாறு அவளது முக விலாஸமும், குளிர்ந்த பார்வையும் மாதர் சிறப்புக்குள்ள லட்சணங்களும் பொலியப்பெற்றவளாய் விளங்கினள். மேலும்,

மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற்
கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத்துணை

என்ற திருவள்ளுவ நாயனாரது வாக்கின்படியே வாழ்க்கைத் துணைவிக்குரிய அறிய இயல் புகழெல்லாம் அமையப்பெற்று விளங்கினள் என்றால் அது மிகையாகாது. இயற்கை வடிவும், அழகும் பொருந்திய இவளைக் கண்ணுறும் எவரும் இவளை ரதியோ, புஷ்பவதியோ, இலட்சுமியோ அன்றி பார்வதியோ என்று சந்தேகிக்கும் விதமாக மிக அழகு வாய்ந்தவளாகக்காணப்பட்டாள். இவளை கண்ணுறும் எவரும் மேலும் பொல்லாத மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை மூன்றினையும் முற்றும்வெறுத்து ஜாதேந்திரியர்களாகி துறவறம் பூண்டு மண்ணில் விதியும் முனிவர்களும் இவளைக் கண்ணுற்றால் மயங்கிடுவார்கள் என்பது நிச்சயமெனின் இதனைப்பற்றி மீண்டும் வரித்துரைக்கவேண்டுவதில்லை முன்னம் சங்ககாலத்து சிவபெருமானுக்கும் நக்கீரருக்கும் இயற்கை வாசனை உயர்ந்ததா செயற்கை வாசனை உயர்ந்ததா என்ற சச்சரவு ஏற்பட்டதைச சொல்லக் கேட்டதுண்டு. இயற்கை அழகுக்கு உயர்வா செயற்கை அழகுக்குச் சிறப்பா என்னும் வாதம் ஏற்பட்டிருப்பின் இப்பெண்ணே இயற்கை அழகின் சிறப்பினை நிரூபித்திருக்க முடியும்.

தங்கப்பதுமை போன்ற மேனியுடன் நின்றுகொண்டிருந்த பெண்மணியின் மனம் மட்டும் வேறு இடத்தில் சென்றிருந்தது. மனோ வியாதி அவளைப் பீடித்திருந்ததாக அகக்கண்ணாடி காட்டியது. இத்தகைய உயரிய குணங்களும், அழகும், அறிவும் நிரம்பப்பெற்ற மாது "வறுமையிற் செம்மை" என்றவாறு பரம தரித்திர தசையில் இன்னல்கள் பல தோன்றிடுங்காலத்தும் "எல்லாம் அவன் கட்டளை", அவனன்றியோரணுவும் அசையாது என்ற பழமொழிகளை ஞாபகப்படுத்திக்கொண்டு தாயின் முகத்தைப் பார்த்துப்பார்த்து கண்ணீர் விட்டு வந்தாள். தாயினது வருத்தத்தைத் தனிக்கவொண்ணாத நிலையில் வெளி வந்து இனி என்ன செய்வது என்று ஏங்கி, ஏங்கி மனம் வாடினாள். வாடா மல்லிகை யென்ற மலர் உண்டு. ஆனால் மல்லிகை மலர் போன்ற மிருதுவான சரீரம் படைத்த இம்மலர் மாது வாடத் தலைப்பட்டது. வீட்டினுள்ளே சென்று வாயிற் கதவைத் தாழ்ப்பாளிட்டுக் கொண்டு பின்வருமாறு நினைக்கலானாள்.

"வறுமையிற் செம்மையாக வாழ்வை நடத்த வெண்ணின் வாழ்வு தாழ்வுபட வாரம் பிக்கின்றது. இந்தச்சிறிய வீட்டில் குடியிருக்க வசதியற்று நானும் எனது தாயும் நீண்டகாலமாகக் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறோம். வீட்டின் எல்லா பாகங்களிலும் கதிரவனின் கிரணங்களும், வருணனின் வருஷிப்பும், வாயுவின் விஷமத்தனமும் தங்குதடையின்றி ஏற்படுகின்றன. மேலும் எனது பருவகாலத்தின் காரணமாக பல தொல்லைகள் சம்பவிக்கும் போலிருக்கிறது, பல ஆடவர்களது வலையினின்றும் சிக்க வகை யொன்றும் புலப்படவில்லை. அந்த சிப்பாய் ரணவீர ரஞ்சித் சிங் என்னை மணக்க வேண்டுமென்று தாயினிடம் பேசியும் பய முறுத்தியும் சென்றிருக்கிறான். இவனைத்தவிர வேறு சிலரும் மணக்கவேண்டுமென விருப்பங்காட்டி வருகிறார்கள். நான் ஒருத்தி யாருக்கென மனைவியாவது தெரியவில்லை. வீட்டில் ஓர் ஆண்பிள்ளை எஜமானன் இல்லாது போனதால் அல்லவா பலரது துஷ்ட எண்ணங்களுக்கும் ரணவீரனது பயமுறுத்தலுக்கும் நானும் எனது தாயும் உள்ளாகவேண்டியிருக்கிறது. இது காறும் எனது கற்பைக் காத்து வந்தேன். என்னைக் காதலித்து மணந்து கொள்வதாகச்சொல்லி கொஞ்சம் பொருளுதவியும் செய்து சென்ற எனது காதலனும் இன்னும் திரும்பிவரவில்லை. அவர் கொடுத்த பணமும்

தீர்ந்து விட்டது. இன்று ஆகாரத்திற்கு என்செய்வது, ஒன்றும் தெரியவில்லை. கையிலிருந்த சில்லரை நகைகளையும் அடகுவைத்து செலவும் செய்யப்பட்டது. அவரது வரவை எதிர்பார்த்து நின்றும் அவர் இன்னும் வரக்காணோம். எனது கால்கள் தான் நோவுகின்றன. தகப்பன் இருப்பதும் இறந்ததும் தெரியவில்லை. அவர் போய் பல வருஷங்களாகிவிட்டது. இந்த நிலையில் தக்க கணவனை நாடி இல்லற வாழ்க்கையை நடத்தவோ இன்னும் காலம் கூடவில்லை. நான் விரும்பிய காதலன் வராமற்போனால் தற்கொலை புரிந்துக் கொள்வதுதான் மேலானமுறையென்று தோன்றுகிறது. அங்ஙனம் செய்வதாயின் என்னை 10 மாதம் சுமந்துபெற்று இதுசாறும் பல இன்னல்கள் மத்தியில் என்னை வளர்த்தெடுத்த தாயை எங்ஙனம் விட்டுவிட்டு உயர் நீப்பது. இது சாத்தியமில்லையே பிறகு என்ன செய்யலாம். ஒரு வழியும் தற்போது புலப்படவில்லை. ஐயோ, எத்தனை காலம் இப்படி கஷ்டப்படுவது. கஷ்டப்பட்டால் பின்னால் சுகமுண்டு என்று சொல்லுவார்களே அப்படியாவது சுகம் வருவதாகவும் தெரியவில்லை. கல்லையும் மண்ணையும் காய்ச்சிக்குடித்துக் காலந்தள்ளவோ ஈசன் கற்பித்தானில்லை. பலவேறு இடையூறுகளுடன் வாழ்க்கையை நடத்திசெல்ல தாய் முன்போல் வீடு வீடாகச்சென்று யாசித்து வந்ததுபோல் நடத்தவோ இப்போது சாத்தியமில்லை. அதற்கும் எனது பொல்லாச் சரீரம் குறுக்கிட்டு முட்டுக்கட்டை போட்டுக் கொண்டிருக்கிறது. எனது யௌவன பருவகாலத்தில் பலதுன்பங்கள் நேருகின்றன. தன்னந்தனியே என்னை விட்டுவிட்டு தாய் வெளிச்செல்வதற்கில்லை. துஷ்ட ஆடவர்கள் மத்தியில் காப்பாளர் இல்லாத அநாதைகளாக வசிக்க வேண்டியிருக்கிறது. அக்கம் பக்கத்து வீட்டார்கள் எவ்வளவு காலம் உதவ முடியும். ஒரு சமயம் நான் உயிர்துறந்து விட்டால் எனது தாயாவது யாதொரு கஷ்டமும் இன்றி யாசித்து ஜீவிக்கமுடியுமா இது என்ன! கெட்ட எண்ணம் தோன்றுகிறதே தாயார் என்னை அரும்பாடுபட்டு வளர்த்ததற்குப் பிரதியாக நான் உதவி அவளுக்குச் செய்யாமல் இறப்பது தகுமா? தகாது. அவளது தள்ளாமை காலத்தில் அவளைக் காப்பாற்ற வேண்டிய முக்கிய தர்மம் எனக்குண்டு. அவள் உயிர் நீத்தால் உடனே இறப்பது உத்தமம். எனவே எங்ஙனமாவது வாழ்க்கையை நடத்தவே யோசனை செய்ய வேண்டும். தாயும் வெளியே போகக் கூடாமல் என்னைக் கட்டிக் காத்திருக்க வேண்டி நேரிடும்போது வாழ்க்கைக்கு இன்றியமையாத ஆகாரத் தினைத் தேடுவதெப்படி. காதலனும் இன்னும் என்னைத்தேடி வரக்காணோம். நாட்கள் பலவாகிவிட்டன. "ஒரு நாளுணவை ஒழியென்றால் ஒழியாய்" என்ற ஆன்றோர் வாக்குப்படி ஆகாரமின்றி ஒருநாளைக் கடத்தவும் முடியவில்லை. என்ன கஷ்டம், என்ன துன்பம், என்ன சங்கடமானநிலைமை, ஐயோ, இந்தப் பரமஎழைக் குடும்பத்தை ரட்சிக்க எல்லாம் வல்ல இறைவனுக்கு ஆற்றல் இல்லையா, அன்றி கஷ்டப்பட வேண்டியது தான் என்று அயன் விதித்து விட்டானா. தர்மத்துக்கும், சத்தியத்துக்கும், குலதர்மத்துக்கும், மததர்மத்துக்கும், சமூக, சமுதாய தர்மங்களுக்கும் முரணாக இன்று நான் நடந்து விடுவதாகத் தீர்மானித்து விட்டால் நான் பல்வேறு ஆடவர்கள் மனதை களிக்கச் செய்விப்பதுடன், உயர்ந்த செல்வ சீமாட்டியாகியும் விடலாம். நானும் எனது அருமைத் தாயும் கஷ்டப்படவேண்டியிராது. எனக்குக் காவலனும் ஏற்பட்டு விடுவான். அந்தோ என்—இக்கொடுமை எண்ணங்கள்- தோன்ற வேண்டும். இவையெல்லாம் வறுமைப் பிணியல்லவா. இருந்தாலும் எல்லா ஜீவராசிகளுள் உயர்வான மானிட பிறவியையும் ஆறறிவையும் பெற்றுள்ள நான் இந்தக் கேவலமான எண்ணத்தில் ஈடுபடுவதும் வெருக்கத் தக்கதன்றோ. பொல்லாக் கொடிய வயிற்றின் கொடுமையல்லவா இத்தகைய எண்ணங்களுக்கும் வழி காட்டியாக முனைகின்றது. எ! ஜகதீசா, ஜகத் ரட்சகா, தீனதயாளா, ஹே! ஜகதம்பிகே ஜகத் ரட்சகி, லோகநாயகி கௌரியம்மா தாயே, அடியாளை நீ தான் காப்பாற்றி ரட்சிக்கவேண்டும். இந்த ஆபத்தினின்று விடுவிக்க உனக்குத் தான் ஆற்றல் உண்டு. எங்கெங்கு பார்த்தாலும் எல்லாம் அவன் மயம் என்று சொல்லக் கேட்டிருக்கிறேனே, அப்பனே, உன்னைக் காண கூடவில்லையே அன்று பிரஹலாதாழ்வானைப் பார்த்து அவன் தந்தை "உன் கடவுளைக் காட்டு" என்று ஆஞ்யாபித்த காலத்து "என் கடவுள் ஒரு சாணிலுமுளன் ஓரணுவை சதகூறிட்ட கோணிலுமுளன். இத் தூணிலுமுளன், (தந்தையைப் பார்த்து) நீ சொன்ன சொல்லினுமுளன்" என்று சொன்னதாக புராணங்கள் கூறுகின்றனவே. அங்ஙனமாக எங்கும் வியாபித்திருக்கின்ற சர்வ வியாபியான அப்பெருமான் இந்த ஏழைக்கு உதவியளிக்க முன் வரலாகாதா? இந்த ஏழை படும் பாடும் அவனுக்கும் சம்மதமோ? நான் வகையறியாது தவிக்கின்றேனே, எ! அனாத ரட்சகா, இனி நான் துன்பந் தாங்க மாட்டேன், நீ தான் எங்களை ரட்சிக்கக் கடமைப் பட்டவன் "எனது குடும்பம் உயர் குடும்ப மென்பதும், நானும் என் தாயும் உன்னைப் பிரார்த்தித்து வந்ததும், நான் பல இன்னல்கள் மத்தியில் எனது கற்பை காக்க முயன்று வந்ததும், களங்கமற்ற மனதுடன் இந்நிலையில் உன்னைப் பிரார்த்திப்பதும் உண்மையானால் என்னை நீ கைவிடலாகாது, நீ கைவிடலாகாது, நீ கைவிடலாகாது, உன்னையே நம்பினேன் என்று சொல்லிய வண்ணம் அழுதுகொண்டே படுத்து மூர்ச்சித்தாள் நமது சாந்தா சத்திய தேவியும்.

* * *

ஊரின் கோடியில் உள்ள சந்தில் இவ்வீட்டின் வெளி நின்று அம்மா! அம்மா! என்ற சத்தத்துடன் யாரோ கதவைத் தட்டுவதுபோல் உள்ளே உட்கார்ந்துகொண்டிருந்த சுந்தரி பாயின் காதில் விழுந்தது. மிகுந்த கவலையில் மூழ்கிக் கிடந்த இவள் சடேலென எழுந்து வெளிப்பக்கம் கதவை திறக்க வந்தாள். வரும்போது நடைபாதைக் கருகில் உள்ள சிறு அறையில் ரூபவதியான சாந்தாவும் மெய் மறந்த நிலையில் படுத்துக்கிடந்தாள். வறுமை நோய் ஒரு பக்கம், தேகச் சோர்வு மற்றொரு பக்கம், மனக்கவலை இன்னொரு பக்கமாக வாட்டப்பட்ட சுந்தரிக்குத் தன் மகளின் நிலைமையைக் கண்ணுறும் போது அவள் மனம் எத்தகைய நிலையை அடையப் பெற்றிருப்பாள் என்பதை நேயர்கள் ஊன்றி கவனித்தல் வேண்டும். முதலில் கதவைத் திறப்போம் யாரென்று பார்ப்போம் என்று மிகுந்த அவாவுடன் கதவைத் திறந்தாள். வந்திருந்த இருவர்களைக் கண்ணுற்றதும் சுந்தரிபாய் திடுக்கிட்டாள். மயிர்க்கூச்சலிட வாரம்பித்தது. வந்தவர்களை யார் என்று வினவக்கூட நாவெழவில்லை பயம் வர வர அதிகரித்தது. இக்காரணங்களால் கதவின் பக்கமாக நின்றுகொண்டு "ஐயோ, ரண வீர சிங்கன் ஆட்களா, ஐயோ, ஐயோ, என் செய்வேன்" என்று கத்தவாரம்பித்தாள். வந்தவர்களுள் முதலாவன், என் அம்மா கத்துகின்றீர்கள். சும்மா இருங்கள் உங்கள் நன்மைக்கே உங்கள் க்ஷேமத்தின் பொருட்டே நாங்களிருவரும் வந்திருக்கிறோம். அழாமல் கூச்சலிடாமல் எங்களோடு இந்த வண்டியில் வாருங்கள். உங்கள் பெண்ணையும் கூட்டி வாருங்கள் நீங்கள் பயப்படவேண்டாம். ஏதாவது பலமாக கூச்சலிட்டால் உங்களிருவரையும் துன்புறுத்தி வாயிலில் துணிய

டைத்து உள்ளே வைத்துப் பூட்டிச் செல்வோம். நாங்கள் யார் தெரியுமா? எங்கள் படைத் தலைவர் ரணவீர ரஞ்சித சிங்கின் வேலையாட்கள், பகல் வேளையாயிருக்கிறதென்று பார்க்கிறோம். இரவானால் உங்கள் இருவரையும் கட்டித் தூக்கிச் சென்று விடுவோம்'' என்றான். ''என்னம்மா பதில் வரவில்லை. சும்மா நிற்கிறாய். எங்கே உனது பெண், (கூட வந்தவனைப் பார்த்து) எண்டா தாமதம் கட்டு இருவர்களையும், வாயிலில் துணியடைத்துவிடு. இங்கேயே விட்டுவிட்டு இரவில் தூக்கிச்செல்லுவோம். அடுத்த நிமிஷம் அரை வயிற்று கஞ்சிக்கு வழியில்லாதவளுக்கு எத்தகைய ஆணுவம் பார்'' என்று கர்ஜித்தான்.

இதனை செவியுற்ற சுந்தரி எற்கனவே மனம் உடைந்தவளான படியால் பின்னும் திடுக்கிட்டு தனது குலதேவதையான கண்ணபிரானை நினைத்து ''நீயே துணை'' என்று அவனை தியானித்துக் கொண்டே கீழே வீழ்ந்தாள். உடனே பிரக்ஞையற்ற நிலைமையும் அவளுக்கு எற்பட்டு விட்டது. வந்த இரு பேர் வழிகளும் உள் நுழைந்து இருவர்களையும் கட்டி வாயில் துணியடைத்துப் போட்டு விட்டு தன் எஜமானனிடம் தகவல் சொல்லும் நோக்கத்துடன் உள் நுழைந்து கதவின் உட்புறம் தாழ்ப்பாளிட ஆரம்பித்தனர்.

டக், டக், டக், டக் என்ற சத்தத்துடன் இரு குதிரைகள்மீது ஆரோகணித்து இரு வீரர்கள் இவ்வீட்டின் முன்புறம் அச்சமயம் வந்து நின்றனர். இவர்களையொட்டியே ஒரு சாதாரண கோச் வண்டியும் வந்தது. இவர்கள் வந்திறங்கியதை தாழ்ப்பாளிடப்போகுந் தருவாயில் பார்த்ததும் இருபேர்வழிகளும் நடுநடுங்கினார்கள். உடனே கதவை நன்றாய் திறந்துவைத்துக் கொண்டு இரு குதிரை வீரர்களையும் பார்த்து ''பாருங்கள் இதோ, இவ்விரு ஸ்திரீகளையும், சில போக்கிரிகள் ஹிம்சிக்கத்தொடங்கினார்கள். அவர்களைக்கண்டு அவ்விரு பெண்களும் பயந்து மூர்ச்சித்துக்கிடக்கின்றனர். தாங்களிருவரும் தயைகூர்ந்து இவர்களை ரக்ஷிக்கவேண்டும்'' என்று சொல்லி ரணவீரசிங்கின் வேலையாட்களிருவரும் மெதுவாக தப்பிச்செல்லப்பார்த்தனர். ''அடே குதிரை வீரர்களே! அவ்விருவர்களையும் விடாமல் பிடித்துக்கொள்ளுங்கள் என்று சொல்லி, கோச்சை விட்டு கீழே இறங்கி முத்து உள்ளேசென்றான் தாயும் தன் காதலியும் அலங்கோலமாக படுத்துக்கிடப்பதைக் கண்ணுற்று வருத்தமுற்றவனாய் சுந்தரியை அவள் பெயரால் அழைத்தான். சுந்தரி கண்விழித்துப்பார்த்ததும் முத்து பின்புறமாகநின்றதால் குதிரை வீரர்களைக் கண்ணுற்றதும், ''பாவி சண்டாளா, ஐயோ ரணவீரசிங்களு'' என்றுசொல்லி மறுமுறையும் பூமியில் சாய்ந்தாள். முத்து ''அம்மா நான்தான்'' என்று முன்புறமாக வந்து நின்று கூப்பிட்டான். குரல் மாறாக இருப்பதையுணர்ந்து தன் பெண்ணை மணந்து கொள்வதாகச்சொன்னவர் தான் வந்திருக்கிறாரோ வென்று தலை நிமிர்ந்துகொண்டு கவனித்தாள். திடீரென பயம் நீங்கி நாணங்கொண்டு மாப்பிள்ளையைக்கண்ட மாமிபோல் ஒதுங்கி நின்று ''இரு சண்டாளர்கள் வந்தனரே, அவர்கள் எங்கே, சென்று விட்டனரா'' என்று கேட்டாள். இதற்கு பதில் கூறாது வேகமாக சாந்தாவிடம் சென்று அவளது அழகிய அடர்த்தியான சுருங்கூந்தற்குவியல் அவளது சந்திர வதனத்தை வானத்தில் கருமேகங்கள் சூழ்ந்து நிற்பதுபோல் சூழ்ந்திருக்கும் நிலையில், அவளைத்தூக்கி தன்மார்பு பக்கம் சாய்த்துக்கொண்டு தனது வலது கையால் கூந்தலைக்கோதி ஒரு பக்கமாக தொங்கும்படி செய்வித்து முகத்தைத் தடவிக்கொடுத்து ''சாந்தா, சாந்தா, என்னைப்பார்'' என்றான் முத்து. ''பாவி ரணவீரா, சண்டாளா என்னையும் தீண்டினையா, ஐயோ'' வென்று அழுதாள். தனது பட்டு அங்கவஸ்திரத்தால் கண்ணீர்வடிவதைப்பார்க்க சகியாமல் துடைத்துவிட்டு யார் வந்திருக்கிறதென்பதை சற்று பார்த்துவிட்டுப்பேசு'' என்றான் முத்து. கண்ணைத்திறந்தாள் சாந்தாவும் மூர்ச்சை தெளிந்தாள். கண்களை கண்கள் நோக்கின. சற்று நாணங் கொண்டு சடேலென எழுந்தாள். அங்ஙனம் எழுந்திருக்கும்போது இருவர் மனமும் அறியாமலே முத்தந்தந்திட நேர்ந்தது. மார்பின் மீது சாய்ந்து கொண்டிருந்த வண்ணம் சாந்தா எழுந்தபோது இயற்கையாகவே இது நிகழ்ந்துவிட்டது. இந்த நிலையில் வெளியில் ''என்ன நீங்கள் செய்தீர்கள், சொல்லுங்கள். உங்களை விடமாட்டோம்'' என்று கண்டன, தண்டனைக்குறிய கடூர வசைமொழிகளாலும், கையில் கொண்டுவந்த ஈட்டிப்பிடிகளாலும் இருபேர்வழிகளும் குதிரை வீரர்களால் தண்டிக்கப்பட்டனர். கடவுளின் ஆக்ஞையை சாந்தா உணர்ந்தாள். தெய்வத்தைத் துதி செய்தாள். பின்னர் தன் காதலனிடம் இருபேர்வழிகள் வந்த விருத்தாந்தத்தை தன் தாயார் சொல்லக்கேட்டாள். கோச் கொண்டுவந்திருப்பதாயும் இருவர்களையும் புறப்படும்படியும் முத்து வேண்டினான். எப்பொழுது முத்து வருவான் என்றும், எப்பொழுது சாந்தாவைமணம் புரிவான் என்றும், எப்பொழுது தன் கஷ்டம் தீருமென்றும் எக்கமுற்றிருந்த இருவர்களும் எங்கே, எதற்கு செல்லவேண்டுமென்று கேளாமல் தங்கள் உடுப்புகளை எடுத்துக்கொண்டு தாயும் மகளும் கோச்சில் எறிக்கொண்டனர். முத்துவும் எறி சாந்தாவின் பக்கம் உட்கார்ந்துகொண்டு குதிரைவீரர்களை பார்த்து ''இரு பேர்வழிகளையும் போலீசுக்கு அழைத்துச்சென்று தாக்கல் செய்துவிட்டு வா. ஸ்வர்ணபுரி அரண்மனை வழக்காக ரிஜிஸ்டர் செய்துகொள்ளச் சொல். பிறகு நான் கவனித்துக்கொள்ளுகிறேன். அரண்மனைக்குப் பின்னிட்டு வாலாம். நான் முன்னடி செல்லுகிறேன்'' என்று சொல்லிமுடிந்ததும் வண்டிக்காரன் கோச்சை வேகமாய்நடத்திச்சென்றான். அப்பொழுது பிற்பகல் சுமார் 11 மணிதான் இருக்கும். குதிரைவீரர்களும் கோச்சும் இவ்வீட்டின் முன்புறம் நிற்கக்கண்ட அயலாரில் ஒருசிலர் வேடிக்கை பார்த்து நின்றனர்.

(தொடரும்.)

## கப்பற் செய்தி.

(Shipping News.)

சென்னை துறைமுகத்தில் நவம்பர் மாதத்தில் எதிர்பார்க்கப்படும் கப்பல்களும் தேதிகளும்:—ரிசல்தார், கிளான் மக்னயிர் 1, டிராடெண்டிஸ், கிளான்மால்கோம் 2, ரஜுலா, ஹேரஸ்பீல்டு, மெய்தான் 3, எதியோபியா, லீபென்பெல்சு மொடாசா 5, டான்டோலா, சிட்டிஆப்ஹியர்போர்டு 6, குரோஹிம்மாரு 6, கிளான்மசிண்டோ 7, சிட்டி ஆப்பெர்த் 8, காம்பாடா மசோபராகிசர்க், ஹடாராணு 11, எரின்புரா 12, பரோடா 13, ஹிசியோன் 14, சிட்டி ஆப்டல்ஹர்ட், விண்டன்பாங்கு, கிளான் மாகிசான், எம். வி. குஜராத் 15, வோல்பி 16, ரோஹணு, மஹாஞதா 17, சிட்டி ஆப்கெயிரோ 18, மல்பொரா 19, கிளான் மன்ரோ 21, சிட்டிஆப்லண்டன் 24, சிலோன், எக்ஸ்பிளோ ராடியூர் கிராண்டிடியூர் 27, கிளான்ரோஸ் 29.

* * *

தூத்துக்குடி துறைமுகத்தில் நவம்பர் மாதத்தில் எதிர்பார்க்கப்படும் கப்பல்களும் தேதியும்:— மகாநாடா 12, ஜலவிஜயா 20, வில்டன்பெல்சு 24, மாசிர் 26 மெக்கீவர் 28. மெக்கீவரில் சிமண்டும், மற்ற கப்பல்களில் இரும்பும் வருகின்றன.

---

**வர்த்தகர்களே! ''வர்த்தக ஊழியனை'' ஆதரியுங்கள்**

# சாமான்களுக்கு ரயில்வே சார்ஜுகள் (RAILWAY RATES)

The Railway do not accept responsibility for the correctness of these quotations a reference should be made to the Local Rate Advices & Foreign Rate Circulars issued by the S. I. Ry.,

| சாமான்கள் | எங்கிருந்து | எந்த இடத்துக்கு | ரேட்டு மணங்குக்கு | | எந்ததேதியிலிருந்து | ஷரா |
|---|---|---|---|---|---|---|
| | | | அ. | பை | | |
| தான்யங்கள் | சென்னை பீச் | வாலாஜாபாத் | 1 | 10 | 25—9—34 | |
| கிரோசின்எண்ணை | எர்ணாகுளம் | கண்ணனூர் | 5 | 6 | 1—10—34 | |
| மீன் எண்ணை | மங்களூர் | எர்ணாகுளம் | 4 | 2 | 15—10—34 | |
| சிமண்டுகுழாய் | சிலைமான் | போளூர் | 6 | 9 | 1—10—34 | 31—12—34 வரை |
| ,, | ,, | சேலம் மார்க்கட்டு | 6 | 0 | 15—10—34 | விருத்தாசலம் மார்க்கம் |
| ரப்பர் | தென்மலை | கொல்லம் | 4 | 2 | 5—10—34 | |
| உப்பு | தூத்துக்குடி | ராமேஸ்வரம் | 4 | 0 | ,, | |
| வெல்லம் | ,, | ,, | 4 | 0 | ,, | |
| கரும்பு | கிணத்துக்கடவு | போத்தனூர் | 0 | 10 | 15—10—34 | |
| ,, | கோவில்பாளையம் | ,, | 0 | 11 | ,, | |
| ,, | பொள்ளாச்சி | ,, | 1 | 0 | ,, | 31—12—34 வரை |
| தேயிலை | தென்மலை | கொல்லம் | 3 | 7 | 5—10—34 | ,, |
| ஓடுகள் | சிலாஷ்வர் | கண்ணனூர் | 1 | 3 | 1—10—34 | ,, |
| ,, | ,, | மாகி | 1 | 3 | ,, | ,, |
| ,, | ,, | தலைச்சேரி | 1 | 3 | ,, | |
| ,, | ,, | திரூர் | 2 | 0 | ,, | |
| நெல் | ராஜபாளையம் | சிவகாசி | 0 | 7 | 8—10—34 | முதல் 31—12—34 வரை |
| ,, | ,, | விருதுநகர் | 1 | 1 | ,, | ,, |
| சிண்டர் | குன்னூர் | மேட்டுப்பாளையம் | 2 | 9 | 1—10—34 | 30—11—34 வரை |
| முந்திரிப்பருப்பு | கண்ணனூர் | மங்களூர் | 2 | 6 | 3—10—34 | |
| விறகு | அங்காடிபுரம் | கோயம்புத்தூர் | 2 | 6 | 1—10—34 | 30—9—35 வரை |
| ,, | மேலட்டூர் | ,, | 2 | 6 | ,, | ,, |
| ,, | கிலாம்பூர்ரோடு | ,, | 2 | 6 | ,, | ,, |
| ,, | வாணியம்பலம் | ,, | 2 | 6 | ,, | ,, |
| ,, | ஒட்டபாளையம் | மதுரை | 3 | 3 | 1—10—34 | |
| ,, | புதுச்சத்திரம் | கும்பகோணம் | 2 | 0 | 15—10—34 | |
| ,, | நெல்லிக்குப்பம் | ஸ்ரீரங்கம் | 2 | 6 | ,, | |
| ,, | ,, | திருச்சி கூட்ஸ் | 2 | 6 | ,, | |
| மாவு | தூத்துக்குடி | ராமேஸ்வரம் | 4 | 0 | 5—10—34 | |
| நெல் | அம்பாசமுத்திரம் | ஆறுமுகனேரி | 1 | 6 | 1—10—34 | |
| ,, | ,, | நாஜரேத் | 1 | 3 | ,, | |
| ,, | ,, | பேட்டை | 1 | 0 | ,, | |
| ,, | ,, | ஸ்ரீவைகுண்டம் | 1 | 1 | ,, | |
| ,, | ,, | திருநெல்வேலி | 1 | 0 | ,, | |
| ,, | ,, | திருச்செந்தூர் | 1 | 10 | ,, | |
| ,, | கல்லிடைகுறிச்சி | ,, | 1 | 10 | ,, | |
| ,, | ,, | திருநெல்வேலி | 1 | 0 | ,, | |
| ,, | ,, | ஸ்ரீவைகுண்டம் | 1 | 1 | ,, | |
| ,, | ,, | பேட்டை | 1 | 0 | ,, | |
| ,, | ,, | நாஜரேத் | 1 | 3 | ,, | |
| ,, | ,, | ஆறுமுகனேரி | 1 | 6 | ,, | |
| சிமண்டு | மதுக்கரை | மதரூஸ் | 7 | 10 | 1—10—34 | ஜோலார்பேட்டை மார்க்கம் |
| பருத்தி | கோயம்புத்தூர் | பரோடா | 28 | 0 | ,, | |
| ,, | ,, | பிலிமோரா | 27 | 4 | ,, | |
| ,, | ,, | புரோச் | 28 | 0 | ,, | |
| ,, | ,, | காம்பே | 30 | 5 | ,, | |
| ,, | ,, | நாடியாட் | 28 | 0 | ,, | |
| ,, | ,, | நாவ்சாரி | 27 | 11 | ,, | |
| ,, | ,, | பெட்லாட் | 29 | 5 | ,, | |
| ,, | ,, | சூரத் | 28 | 0 | ,, | |
| ,, | ,, | விர்மகாம் | 28 | 7 | ,, | |
| மாக்னசைட் | சேலம் | மதரூஸ் துறைமுகம் | 2 | 7 | 10—9—34 | |
| ,, | ,, | பாரிஜாடி | 10 | 6 | 1—10—34 | |

# REVIEWS.

(மதிப்புரைகள்.)

### Files and Rasps.

We acknowledge receipt of a copy of the Standard Price List of Files & Rasps from WM Oxley & Co Ltd Parkgate Steel Works, Rotherham, Yorkshire, England. It is the official Standard List of the File Manufacturers' Association.

### Steels and their uses.

With compliments of Messrs W. Oxley & Co Ltd. Sheffield, England, a very useful profusely illustrated brochure "Steels & their uses" has come to our hands. They manufacture Steel in abundance in their Parkgate Steel works and the brochure deals elaborately about "Parkgate" High Speed Steels.

### Guide to the Press of the World.

The 39th edition of the Dawsons Little Red Book published by William Dawson & sons Ltd. contains the names of the News papers, Periodicals Annuals and Year Books with their subscriptions throughout the world. They are the largest subscription Agency in the world and they can supply any publication The book, "Guide to the Press of the world" would be of considerable help to Librarians Reading Rooms etc. It is distributed free by William Dawson & Sons Limited, Cannon House, Pilgrim Street, Ludgate Circus, London E. C. 4

### Ceylon Blue Book

We acknowledge with thanks the receipt of a copy of the Annual General Report for 1933 on the Economic, Social and General conditions of Ceylon from the Registrar General and Director of Commercial Intelligence, Colombo. It is compiled from the reports of the Government Departments and contains 14 illustrations. It is a useful document to know about Ceylon and its administration. It is priced Rs 2/- and can be obtained at the Government Record Office Colombo.

### Excelsior Hand Book of useful information.

This book contains most useful informations about the town of Bombay and it would have been better if the book is named as Directory of Bombay. This book will help those who wish to visit Bombay It is compiled by Samson Reuben and published by the Indian Commercial Agency 76 Tamarind Lane, Fort, Bombay. It is priced Rupee one only.

### Indian Finance Year Book 1934.

The Indian Finance Year Book, the annual supplement of *Indian Finance*, contains, as usual, a concise and comprehensive reveiw of India's Trade, Budget Finance, Banking, Insurance, Transport, Industry and co-operation with lucid expositions and comparitive statistics. The various sections in the 1934 edition have been expanded in scope and enriched in detail. Among the improvements in the current volume may be mentioned the inclusion of Internal trade in the Trade section, the paint Industry in the Industrial section. India's mineral Industry and population Statistics. Exhaustive informations, covering nearly 30 pages, have been supplemented on the Indian Tariff Board Working. The public must be grateful to Mr. P. R Srinivas Editor and Mr. C. S. Rangasami Managing Editor for this very useful annual. Inspite of the increase in pages, it is priced the same amount of Rupees Five and is obtainable from the Indian Finance Office, 20, British Indian Street, Calcutta.

### Sacred Thoughts.

Souls eager to secure emancipation from the thraldom of senses, the worries of life and a thousand natural shocks, that the mind creates. will do well to commit to memory the contents of the book *Sacred Thoughts* published by Ramanadasa K. S. Seshagiri within the compass of which are brought some of the thoughts of sages, of Royal Saints. of Religious Founders and Prophets,

of Swamies and expounders of Philosophy and of Brahma Gnanies. The Sacred Thoughts are classified and arranged under twelve groups viz. Harmlessness, Purity, Dharma and Thyaga, Fortitude, Self control, Maya and Human Frailty, Renunciation, Soul, Bhakthi, God, Peace, and meditation and Realisation. The book, if used in schools also, will be of real benefit to the teachers as well as the taught. The book is sure to be a valuable addition to one's Religious library. The book under review, is the second edition and is priced annas Three and is available from the Publisher, 138, Brodie's Road, Mylapore, Madras. S.

### சமதர்ம வெளியீடு

திருச்சி, பொன்மலை, சமதர்ம ஆபீசிலிருந்து வெளியிடப்படும் சமதர்ம வெளியீட்டின் மேமாத முதல் பிரசுரத்தில் ஹிந்து, கிருஸ்துவ, முஸ்லீம் முதலிய மத ஆராய்ச்சியைப்பற்றி விரிவாக எழுதப்பட்டிருக்கிறது. சமதர்மவெளியீடுகளனைத்தும் தவறாமல் தபாலில் பெற விரும்புகின்றவர்கள் தபால் செலவுக்காக ரூபாய் ஒன்று முன்பணமாக அனுப்பி பெற்றுக்கொள்ளலாம்.

### சித்தர் களஞ்சியம்.

